# கலித்தொகை காட்டும் வாழ்வியல் தொழில்கள்

***முனைவர் மா. உமாராணி***
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆலங்குளம்
தென்காசி மாவட்டம்

மலர்: 12
சிறப்பிதழ்: 1
மாதம்: மார்ச்
வருடம்: 2025
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.5281/zenodo.14958663

### முன்னுரை

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு உடை இருப்பிடமாகும். பண்டையகால மனிதன் இயற்கையில் கிடைத்த உணவினை உண்டு வாழ்ந்தான். பண்டைத்தமிழர் விளைபொருளுக்கேற்ப நிலங்களை பிரித்து பக்குவபடுத்தினான். உணவு தேடிய சமூகம் உணவு உற்பத்தியில் இறங்கியது. கைத்தொழில் மற்றும் கைவினைத் தொழில் மக்களின் வளமான வாழ்விற்கும் வசதிக்கும் பயன்படும் தொழில்களை இன்றைய தலைமுறைக்கு எடுத்துக்றும் விதமாக இக்கட்டுரை அமைக்கிறது.

### உழவுத்தொழில்

வேளாண்மை மருத நில மக்களின் தலையாய தொழில் ஆகும். இந்நில மக்களின் வேளாண்மை அறிவினையுடைய நாவாகிய ஏராலே உழுது உண்ணும் புலவரின் புதிய கவி என்ற புலவனைக் குறிக்கும் என்பதை,

**புலன் நா உழவர் (கலி.67:4)**

உவமை மூலம் அறியலாம். செந்நெல் செழிப்பாக வளர்ந்து உள்ளது. அச்செழிப்பினால் பறவைகள் வயலிடத்து ஓளிகின்றது. வுயிலடத்து தாமரை மலர்ந்து காணப்படுகின்றது. நீர் வளம் மிகுந்து உழவுத்தொழில் சிறந்ததினைஇ

**புள்ளிதழ் அகல் வயல் ஓலிசெந்நெலிடைழத்த**
**முள்ளரைத் தாமரை முழுமுதல் (கலி.7.8:1ரூ2)**

என்ற மருதக்கவி பாடல் வரிகள் விளக்குகின்றது. முகில்நெல் குறிஞ்சி நிலங்களிலும் விளைவித்தனர் என்பதனை,

**ஆடுகளை நெல்லை அரையுரலுட் பெய்திருவாம் (கலி.40:12)**

என்னும் வரி குறிப்பிடுக்கிறது. அறிவியல் தொழில்நுட்பத்தின் காரணமாக வேளாண்மையில் புதிய புதிய ரகங்களை கண்டறிந்து குறைந்த நிலப்பரப்பில் அதிக மகசுல் பெறுவதை நாம் கண்டாக பார்க்க முடிகிறது.கோதுமை மற்றும் அரிசி தானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து வருகிறோம்.

### வேட்டைத்தொழில்

சங்க காலத்தில் வேட்டைத்தொழில் சிறப்பாக நடந்தது. வேட்டைக்குச் செல்வோர் அதற்குத் தேவையான கருவிகளுடன் சென்று காட்டில் எல்லா திசைகிலும் அலைந்து வேட்டையாடுவதற்குரிய விலங்குகள் உள்ள இடத்தை அறிந்து அவற்றைத் தாக்கினார். வெள்ளையானை மான் போன்றவை மக்கள் வேட்டையாடினார் என்பதை,

***இலங்கொளி மருப்பின் கைம்மா உளம்புநர்***
***புலம் கடி கவணையின் புஞ்சினை உதிர்க்கும்***
***(கலி.22:1௫2)***

***கொலை வெங் கொள்கையோடு நாய் அகப்படுப்ப***
***வலைவர்க்கு அமர்ந்த மடமான்***
***(கலி.22:16௫17)***

என்ற பாலைக்கலி வரிகள் மூலம் அறிய முடிகின்றது. தற்பொழுது வேட்டைத்தொழில் அரிதாகிக்கொண்டே வருகிறது. விலங்குகளை வேட்டை ஆடுதல் சட்டப்படி குற்றமாகும். ஆதலால் விலங்குகளை நாம் பாதுகாக்க வேண்டும்.

### கட்டடத்தொழில்

பழங்காலத்தில் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்த மனிதன் தனக்கென இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொண்டான். அதன் வளர்ச்சி தான் வீடுகளும் அரண்மனைகளும் மாளிகைகளும் மாடங்களும் உருவாயின என்பதை,

***நிலன் நாவில் நீண்ட திரிதஉம் நீள்மாடக் டலார்***
***(கலி.34:17)***

என்ற வரியில் நீண்ட மாடங்களும் இருந்ததை குறிப்பிடுகின்றது. அம்மாட மாளிகையில்

***ஆய்சுதை மாடத்து அணிநிலா முற்றத்துள்***
***(கலி.95:19)***

அழகுடைய சாந்து புசப்பட்ட மாடமும் அழகுடைய நிலா முற்றமும் இருந்ததை அறியமுடிகின்றது. காற்று வீட்டினுள் வருவதற்கேற்ப காதலற் (சாளரம்) அமைக்கப்பட்டு இரட்டைக் கதவுகள் பொருத்தப் பட்டிருந்ததை,

***சாலகத்து ஒல்கிய கண்ணர் உயர் சீர்த்தி***
***(கலி.82:13)***

***பொருந்திரு நிலைஇய வீங்கு சோற்று அகல்மனை***
***பொருந்து நோன் கதவு ஓற்றிப் புலம்பி யாம் வலமா***
***(கலி.82:1௫2)***

சாரளம் அமைக்கப்பட்டு இரட்டைக் கதவுகள் பொருத்தப்பட்டுள்ள வீடு பற்றிய செய்தி றப்படுகின்றது.நாம் வாழ்கின்ற நவீன காலக்கட்டத்திற்கு ஏற்ப கட்டடத்தொழில் பல புதிய நுட்பங்களை கொண்டு அழகிய வடிவங்களில் வீடுகள், நிறுவனங்கள், தொழிற் சாலைகள் போன்ற கட்டிடங்களை குறைந்த காலத்தில் நாம் கட்டி முடிக்க முடிகிறது.

### நெசவுத்தொழில்

இலைகளையும் மரப்பட்டைகளையும், விலங்குகளின் தோலினையும் ஆடைகளாக அணிந்த மனிதன் நுலினாலான ஆடைகளை உடுத்தத்தொடங்கினான். ஆடையை உடை இதுகில்இ கலிங்கம் என்றும் குறிப்பிடுகின்றனர். ஆடைகள் சாயம் தோய்த்தும் கலை நயத்துடனும் நெய்யப்பட்டன. ஆடைகளில் பு வேலைப்பாடு காணப்பட்டதினை,

***பல்கலை சில்புங் கலிங்கத்துள் (கலி.55:11)***

***தைஅய புந்துகில் ஐந்து கழல் ஒரு திரை***
***(கலி.84:5)***

என்னும் பாடல் வரிகள் குறிப்பிடுகிறது. ஆடைகள் பல்வேறு வண்ணங்களைக் கொண்டும் ஆடைகளில் ஒரப்பகுதியில் கரை வைத்தும் நெய்யப்பட்டது. கரை பு வேலைப் பாட்டுடன் காணப்பட்டதை,

***புங்கரை நிலம் படைத்தாழ மெய்யசை***
***(கலி.115:14)***

என்னும் முல்லைக்கலி பாடல் வரி புலப்படுகிறது. பூ வேலைப்பாட்டுடன் நீலநிற வண்ணம் தோய்த்த ஆடையை முல்லை நில மங்கை நிலம் தேய உடுத்தி இருந்ததினை,

***............ நிலம் மாழ்ந்த***
***புங்கரை நீலம் தழீஇ தளர்பு ஓல்கி***
***(கலி.114:14)***

என்னும் வரியில் அறியமுடிகின்றது. ஆடைகள் வண்ணம் தோய்க்கப்பட்டு புவேலைப்பாடு அமைந்து கலை நயத்துடன் நெய்தனர். நம் தேவைக்கு பருத்தி ஆடையை நெசவு செய்த மக்கள் நவீன கருவிகளைக்கொண்டு ஆடைகளை பல வண்ணங்களிலும், பல வடிவங்களிலும் குறைவான நேரத்தில் ஆடையை நெய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு நாம் வளர்ந்து வருகின்றோம்.

### தச்சுத்தொழில்

சிறு குழந்தைகள் நடை பயில நடை வண்டிகள் செய்து கொடுத்ததை,

***கால் வல் தேர் கையின் இயக்கி நடை பயிற்றா***
***(கலி.8)***

என்ற பாடல் வரி மூலம் அறியலாம். குழந்தைகள் விளையாட யானை பொம்மை செய்து கொடுத்தனர் என்பதை,

***திகழ் ஒளி முத்து அங்கு அரும்பாகத் தைஇப்***
***பவழம் புனைந்த பருதி சுமப்ப***
***கவழம் அறியா நின் கை புனை வேழம்***
***(கலி.79:4ரூ7)***

***கடி அரணம் பாயா நின் கை புனை வேழம்***
***(கலி.85:7)***

என்ற எடுத்துக்காட்டுகளினின்று யானை கோன்ற பொம்மைகள் செய்வதற்கு செல்வர்கள் பொன்னைப் பயன்படுத்தியதை அறியலாம். அதை நிற்க வைக்கும் பலகை வயிரங்கள் பதிக்கப்பட்டவையாகவும் பவளத்தால் செய்யப்பட்டவையாகவும் கூறப்படுகிறது. இயந்திரங்களை கொண்டு பல்வேறு மர வகை களை நாம் விரும்புகின்ற அழகியல் ரீதியாக கலை வடிவம் கொண்டு குறைவான நேரத்தில் நிறைய மரப்பொருள்களை விற்பனை செய்து வருகிறோம்.

### அணிகலத்தொழில்

பொன்னால் அணிகலன் செய்பவர் பொற்காலர் எனப்படுவர். கிண்கிணி வளை மோதிரம் சிலம்பு குழை ஆரம் போன்ற அணிகலன்கள் கலை நயத்துடன் செய்யப்பட்டன. அணிகலனின் பகுதிகள் தனித்தனியாக செய்யப்பட்டு பின் பொடியுதிப் பற்ற வைப்பர். பற்ற வைத்த இடம் நிறத்தப் மாறுபடும். பற்ற வைத்த இடம் தெரியாமல் ஓர் அணிகலன் முழுதும் ஒரே நிறமுடையதாய் அமைய அவ்வணிகலனைப் பொற்கொண்ல்லர் ஊது உலையில் வைத்து எடுத்து நீர் ஊற்றுவர். அப்படி செய்வதன் மூலம் அந்த அணிகலனில் பற்ற வைத்த இடங்கள் தெரியாமல் ஒரே நிறமுடையதாய் ஒளிவிட்டு பிரகாசிக்கச் செய்வர். இவ்வாறு பொடி ஊதி வேலை செய்த திறனை,

***காலவைக் கடுபொன் வளைஇய வீரமை சுற்றொடு***
***பொடியடிற் புறந்தந்த செய்புறு கிண்கிணி***
***(கலி.84:1ரூ2)***

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது. பொன்னை நெருப்பினில் உருக்கி அதனுள் மண் வைத்து கலை நயத்துடன் அணிகலன்கள் செய்தனர் என்பதை,

***மாண உருக்கிய நன் பொன் மணி உறீஇ***
***(கலி.116:2)***

பழந்தமிழரின் அணிகலத்தொழில் எந்த அளவு மேம்பட்டிருந்ததை மருதக்கலி பாடல் வரிகள் நமக்கு புலப்படுத்துகின்றது. நகை வடிவமைப்பில் பயன்படுத்தும் தொழில் நுட்பங்கள் முப்பரிமாண அச்சு கலை வடிவமைப்பு கணினி உதவியுடன் விரைவாக செய்து முடிக்க படுகிறது.

### ஆநிரை மேய்த்தல்

முல்லை நீல மக்கள் ஆடுஇ மாடுகளையும் அவற்றைக் காத்து வைத்திருத்தலையும் முக்கியச் செயலாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதை முல்லைக் கலிப்பாடல்கள் குறிப்பிடுகின்றதைஇ

***தத்தம் இனநிரை***
***பொழுதோடு தோன்றிய கார் நனை வியன் புலத்தார் (கலி.105:ரூ5)***
***மேயும் நிரை முன்னர்க் கோல் ஊன்றி நின்றாயோர் (கலி.107:11)***
***பாங்கு அரும் பாட்டங்கால் கன்றொடு செல்வோம்யாம் (கலி.115:1)***

என்பதன் மூலம் கோவலர்கள் மனைக்கு அருகில் உள்ள புல்வெளிகளுக்குச் தம் கன்றோடு பசுவினையும் சேர்த்து மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றனர். மேலும் அதனைக் காப்பதற்காக கோவலர்கள் கோலுன்றி நின்றனர் என்பதையும் அறியமுடிகிறது. கால் நடை வளர்ப்பின் மூலம் நாம் கிராம புறங்களில் வாழும் மக்களின் நிதி நிலமையை மேன்படுத்துவதாகும். அதனால் பால் உற்பத்தியில் அதிக லாபம் ட்ட முடிகிறது.

### சலவைத்தொழில்

ஆடைகளை சலவை செய்து கொடுக்கும் தொழிலையும் அத்தொழில் செய்யும் தொழிலாளர்களைப் பற்றியும்,

***....... ஊரவர்***

***ஆடை கொண்டு ஒலிக்கும் நின் புலைத்தி***

***(கலி.71:13ரூ14)***

*என்னும் பாடல் வரிகள் மூலம் சலவைத் தொழிலில் சங்க கால மக்கள் டுபட்டுள்ளனர் என்பது புலனாகிறது. இப்பொழுது சலவைத் தொழில் செய்யும் தொழிலாளர்களை பார்ப்பது அரிதாகிவிட்டது. காலத்திற்கு தகுந்தார்ப்போல் அவர்களும் மாறிவிட்டார்கள்.*

**ஓலைத்தொழில்**

*பனை ஓலை, தென்னை ஓலை என ஓலைகளைக் கொண்டு அன்றாடத் தேவைகளுக்கு பொருட்களைச் செய்தனர். ஓலைகளைப் பயன்படுத்தி பலவிதமான டைகளையும் செய்தனர். அவை "புட்பில்" எனப்பட்டது என்பதனை முல்லைக்கலியில்,*

***போழின் புனைந்த வறப்புட்டில்***

***(கலி.116:8)***

***வரிக்ழ வட்டி தமீஇ (கலி.108:14)***

*ஓலையினால் டைகள், பெட்டிகள் செய்து அவற்றில் நெல்லினைக் கொண்டு சென்றதனையும் அறியமுடிகின்றது. இப்பொழுது உள்ள நடைமுறைக்கு ஏற்ப ஓலைகளில் கலை நுட்பங்களை பயன்படுத்தி அதிக அளவில் லாபம் ஈட்டும் கைவினைத் தொழிலாக செயல்பட்டு வருகிறது.*

**தோல் தொழில்**

*இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர் தோலின் பயனறிந்து வாழ்க்கைக்கு தேவையான பயன்பாட்டுப் பொருளாகத் தோலைப் பதப்படுத்தி அதை பயன்படுத்தும் முறைகளையும் அறிந்திருந்தனர். கொல்லன் பட்டறையில் பயன்படுத்தப்பட்ட ஊதுலைக் கருவி தேலால் செய்யப்பட்டது. இது மெல்லிய தேலால் செய்யப்பட்டுள்ளதைஇ*

***கழுவொரு சுடுபடை சுருக்கிய தோற்கண்***

***(கலி.105:1)***

*ஆநிரைகள் மேய்க்கச் செல்லும் முல்லை நில கோவலர் கழுவோடு சுட்டுக்கோலையும் தோற்பையில் இட்டுச் சுருக்கிக் கட்டிக் கொள்வர் என்பதை அறியமுடிகிறது. தோல் பொருட்களின் தேவை அதிகரித்து வருகிறது. காலணிகள், ஆடைகள், கைப்பைகள், வாகன பாகங்கள் செய்யப்பட்டு வருகின்றது. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பல இடங்களில் உள்ளன.*

**முடிவுரை**

*சங்க காலத்தில் ஐவகை நிலத்தில் வாழ்ந்த மக்கள் பல்வேறு தொழில்கள் செய்து வந்துள்ளனர். உழவுத்தொழில், வேட்டைத்தொழில், கட்டடத் தொழில், நெசவுத்தொழில், தச்சுத்தொழில், அணிகலத்தொழில், ஆநிரை மேய்த்தல், சலவைத்தொழில், ஓலைத்தொழில், தோல் தொழில் போன்ற தொழில்கள் இன்றைய இளைய சமுதாயத்திற்கு தேவை என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.*